பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 12 வெள்ளிக்கிழமை 29.10.2021 கதிர் 221

## 4 மாணவர்களுக்கு கொரோனா உறுதி

நாட்டில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் நிலையில், அநுராதபுரம் - பதவி கொங்கெட்டியாவ பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் பயிலும் மூன்று வகுப்புகளைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ☞2

# மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை ஞாயிறன்று நீக்கம்!

## தடுப்பூசி பெறாதவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும் ஜனாதிபதி பணிப்பு



- ஜி.சீ.ஈ. சாதாரணதரம்/உயர்தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானம்
- பொது இடங்களுக்குச் செல்ல தடுப்பூசி அட்டை தேவை
- தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் வசம்

நாட்டில் தற்போது நடைமுறையில் காணப்படும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை, ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞2

## ஆபத்து இன்னும் குறையவில்லை

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி எச்சரிக்கை



நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலும், ஆபத்து இன்னமும் குறையவில்லை என்று இராஜாங்க அமைச்சரான விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். ☞2

## கருவின் தலைமையில் புதிய அரசியல் கூட்டணி

### முக்கிய பிரமுகர்கள் ஆதரவு



முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் புதியதொரு அரசியல் கூட்டணி அமையவுள்ளது எனவும், இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஆளுங்கட்சியிலுள்ள முக்கிய சில அரசியல் பிரமுகர்கள் இணைந்தே இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிய வருகின்றது. ☞2

## புதிய அரசமைப்பு, மீனவர் பிரச்சினை; சம்பந்தனுடன் இந்தியத் தூதர் பேச்சு!



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இன்று மாலை 4 மணியளவில் இருவரும் சந்தித்து உரையாடினர். ☞2




## புதுக்குடியிருப்பில் வெடிபொருள்கள்!

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு - உடையார் கட்டு காட்டுப் பகுதியில் வகைப்படுத்தப்படாத 21 குண்டுகள் மற்றும் மோட்டார் ஷெல் ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று மீட்டனர். ☞2

## அரசுக்கு எதிராக ரணில் வியூகம்!

### போராட்டங்களை முன்னெடுக்க முடிவு



ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வலையமைப்புக்களை வலுப்படுத்தும் அதேவேளை, கட்சியின் தனித்துவத்தின் கீழ் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப்பதற்கான புதிய வேலைத்திட்டங்களையும் எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்துமாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞2




## 60 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் 2 வாரங்களில் விநியோகம்

இலங்கையில் கடந்த 14 நாள்களில் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது எனக் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ☞2

## மின்சார சபை ஊழியர்கள் அரசுக்கு எதிராக யாழில் இன்று ஆர்ப்பாட்டம்




(இ.கலையமுதன்)

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தினை அமெரிக்காவுக்கு விற்பனை செய்தமைக்கு எதிராக இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணத்தில் உள்ள வடபிராந்திய ☞2

## 4 மாணவர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து சுமார் 90 மாணவர்கள் அவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொங்கெட்டியாவ பாடசாலையில் 2, 3 மற்றும் 4ஆம் தரங்களில் கல்வி பயிலும் நான்கு மாணவர்களுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாணவர்கள் எவரும் அந்தப் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை எனவும், ஆசிரியர்கள் மாத்திரமே கடமைக்குச் செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆபத்து இன்னும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்டா பிளஸ் பிறழ்வு நாட்டுக்குள் நுழையும் அபாயமுள்ளது.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டபோதும், டெல்டா பிளஸ் பிறழ்வால் ஆபத்து மீண்டும் அதிகரித்துள்ளது.

இலங்கையும் அத்தகைய ஆபத்திலேயே உள்ளது - என்றார்.

## கருவின் தலைமையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பிரகாரம் ஆளுங்கட்சியில் உள்ள முக்கிய புள்ளிகள் வெளியேறக்கூடும் எனவும், கருவின் தலைமைத்துவத்துக்கு ரணிலும் பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அரசுக்கு எதிராக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய சகல வலையமைப்புக்களையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார் என்று கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளாத, அரசுக்கு எதிராகவுள்ள சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய வலையமைப்புக்களை வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன, உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் உள்ளிட்டவர்களின் கண்காணிப்பின் கீழ், கொரோனா நிலைமைக்கு ஏற்றவாறு மேற்குறித்த வலையமைப்புக்களை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்துறையினர் அமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர் மன்றம், அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட சகல அமைப்புக்களையும் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கமைய துரிதமாக வலுப்படுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வலையமைப்புக்களை வலுப்படுத்தும் அதே வேளை , கட்சியின் தனித்துவத்தின் கீழ் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிப்பதற்கான புதிய வேலைத் திட்டங்களையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துமாறும் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார மேலும் கூறினார்.

## புதுக்குடியிருப்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு கடற்படை முகாமுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு காட்டுப் பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைப்பற்றப்பட்ட வெடிகுண்டுகள் மற்றும் மோட்டார் ஷெல்களைச் செயலிழக்கச் செய்து அழிக்க நீதிமன்ற உத்தரவு கிடைக்கும்வரை அவை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

## 60 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தின் கடவுச்சீட்டு கட்டுப்பாட்டாளர் எச்.பி.சந்திரபால இதனைத் தெரிவித்தார்.

கடந்த 5ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 14 அலுவலக நாள்களில் கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

தற்போதைய நெரிசலைக் குறைக்கும் வகையில் அலுவலகப் பணிகள் காலை 6 மணிக்கு ஆரம்பிக்க வேண்டியுள்ளது எனவும், இம்மாதத்துக்குப் பின்னர் இந்நிலைமை படிப்படியாகக் குறையும் எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

## மின்சார சபை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு மற்றும் கையெழுத்துப் போராட்டங்கள் இன்று முன்னெடுக்கப்பட்டன.

கெரவலப்பிட்டிய மின்நிலையத்தின் 40 சதவீதப் பங்கை அமெரிக்காவுக்கு விற்பனை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியினரின் ஏற்பாட்டில் இலங்கையின் அனைத்து இடங்களிலும் இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு முன்பாக இன்று மதியம் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில், யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் வடபிராந்தியக் காரியாலயத்துக்கு முன்பாகவும் போராட்டம் இடம்பெற்றது.

கையெழுத்துப் போராட்டத்தின் பின்னர் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது அரசின் நடவடிக்கைக்கு எதிராக சுலோகங்களும் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## மாகாணங்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், பொதுமக்களின் வாழ்க்கை முறைமை பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இன்று முற்பகல் நடைபெற்ற கொரோனாத் தொற்றொழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பில் அவதானம் செலுத்தி, ஜி.சீ.ஈ. சாதாரணதரம் மற்றும் உயர்தரங்களுக்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி, கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விரைவில் ஆராயுமாறும், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களுக்குச் செல்லும் போது, தடுப்பூசி அட்டையைக் கட்டாயம் எடுத்துச் செல்வதற்கான இயலுமை தொடர்பில் உடன் கண்டறியவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க, கொரோனா சட்டதிட்டங்களில் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளது எனச் சுட்டிக் காட்டிய சுகாதார அதிகாரிகள், இது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலின் முன்னேற்றம் தொடர்பிலும், ஜனாதிபதி இதன்போது ஆராய்ந்தறிந்தார்.

கொரோனா மரணங்களின் வீதம் மற்றும் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள, தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அத்துடன், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு நடமாடும் சேவையை முன்னெடுக்குமாறும், அனைத்து மக்களும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

இதற்காக, பொதுச்சுகாதார அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பிராந்திய அரசியல்வாதிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் ஆலோசனை வழங்கினார்.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் சில குழுவினர் முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்கள் தொடர்பில், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களால் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது.

தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட குழுக்கள் தொடர்பில் உடன் கண்டறியுமாறு, பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போதைய தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி, நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டத்தில், மாகாண மற்றும் மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளர்கள் அதிக பொறுப்புகளை ஏற்க வேண்டுமென்றும் எடுத்துரைத்த ஜனாதிபதி, அனைத்துத் துறைகளையும் தொடர்புபடுத்திக்கொண்டு, கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேலும் வெற்றிகரமாக்கிக்கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் சவாலுக்கு இலக்காகியுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முக்கிய துறையாக சுற்றுலாத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பான பல புதிய தீர்மானங்களுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகள் பிரகாரம், சுற்றுலாத்துறையை மேம்படுத்த, அதிக அக்கறையுடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இலங்கையில் நடத்தப்படவுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக, வெளிநாட்டு ரசிகர்கள் வருவதற்கான வாய்ப்பளித்தல் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது. அவர்களை உயிர்க் குமிழிக்குள் வைத்திருந்து, தேவையான வசதிகளை வழங்க முடியுமென்று, சுகாதாரத்துறையினர் எடுத்துரைத்தனர்.

எதிர்வரும் காலங்களில் நாட்டுக்குள் நடத்தப்படவுள்ள போட்டிகளைப் பார்வையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு, உள்நாட்டு, வெளிநாட்டு போட்டி ஒருங்கிணைப்பாளர்களால் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவை, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் அந்நியச் செலாவணியை அதிகரித்துக்கொள்ளக் கிடைத்துள்ள விசேட வாய்ப்புகள் என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதன்போது எடுத்துரைத்தார்.

## புதிய அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திருமதி.பானு பிரகாஷ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சம்பந்தனுக்குத் தங்களுடைய தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்தியத் தூதுவர், பல முக்கிய விடயங்கள் குறித்து சம்பந்தனுடன் உரையாடினார்.

இலங்கைக்கான புதிய அரசமைப்பு, இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை என்பவையும் இதில் அடங்கும்.

வடக்கு, கிழக்கில் இந்திய முதலீடுகள், உதவித்திட்டங்கள் பற்றியும் இதன்போது பேசப்பட்டன. மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவோடு இந்தியத் தூதுவர் சந்திப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
தொலைபேசி – 021 222 3000 இணையம் – onlinekathir.com


## அரசுக்கு இறுகும் நெருக்கடி

'அவளைத் தொடுவானேன், அவஸ்தை படுவானேன்?' – என்று ஒரு ஏளன மொழி நம் மத்தியில் உண்டு. கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை, காதோடு காது வைத்த மாதிரி – சத்தம்சந்தடியின்றி – அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்குக் கைமாற்றிய கோட்டாபய அரசின் நிலைமையும் அப்படித்தான் ஆகி இருக்கின்றது. இந்த விடயத்தை ஏன் இப்படிக் கையாண்டோம் என்று தம்மைத் தாமே நொந்து கொள்ள வேண்டிய நிலைக்கு கோட்டா அரசு வந்திருப்பது உண்மை.

அரசுக்கு உள்ளேயே இந்த விடயத்தில் கடும் எதிர்ப்புக் கிளம்பி இருக்கிறது. அது இப்போது பூதாகரமக உருவெடுத்திருப்பதுதான் அரசுக்கு நேர்ந்துள்ள தலையிடி.

இயல்பாகவே அமெரிக்க எதிர்ப்பும், இடதுசாரித்துவ நடிப்பும் கொண்டவையாக மொட்டு கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் விளங்குகின்றமையை ராஜபக்ஷக்கள் நன்கு புரிந்து கொண்டு இருந்திருப்பார்கள். எனினும் இவ்வாறு அமெரிக்க நிறுவனத்துக்குப் பங்குகளை இரகசியமாகக் கைமாற்றுவது தனது பங்காளிக் கட்சிகள் மத்தியில் இத்துணை எதிர்ப்பை வாங்கித்தரும் என்று அவர்கள் கற்பனை பண்ணி இருக்கத்தான் மாட்டார்கள்.

எதிர்பாராத வகையில் ஆட்சிப் பீடத்தின் அமெரிக்க சார்பு போக்கை முளையிலேயே முறியடிப்பதில் மொட்டு கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன என்றே தோன்றுகின்றது. இந்தப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு விட்டுக்கொடுப்பதில்லை என்று இந்தப் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன என்றே தெரிகிறது. ஆனால், ஆளும் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளின் எதிர்ப்பை உதாசீனம் செய்துவிட்டு, விடயத்தைக் கொண்டு நடத்தி முன்னேற ராஜபக்ஷ ஆட்சிப் பீடம் தீர்மானித்தாலும், பங்காளிக் கட்சிகள் அடங்குபவையாகத் தெரியவில்லை.

ஒருபுறம் இவ்விடயத்தை ஒட்டி மக்களைச் சந்தித்து உண்மைகளை வெளிப்படுத்துகிறோம் என்று கூறிக் கொண்டு, அரசுக்கெதிரான எதிர்ப்புணர்வைக் கூட்டுக் கட்சிகளே தூண்டிவிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றன என்றால், மறுபக்கத்தில் அவை தொழிற்சங்க நடவடிக்கைகளை உசுப்பேற்றி, அரசுக்குக் கழுத்தை நெரிக்கும் விதத்தில் தொல்லை கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன.

மின்சார சபை ஊழியர்கள் அரசுக்கு எதிராக இவ்விடயத்தில் காலக்கெடு விதித்து, தொழிற்சங்க நடவடிக்கை எச்சரிக்கையை அறிவித்து இருக்கின்றமை மிக முக்கிய விவகாரமாகின்றது. இவ்விடயத்தில் அரசுக்குள் சில்லெடுத்துக் கொண்டிருக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு மின்சார சபை ஊழியர் தொழிற்சங்க தலைவர்கள் பேச்சு நடத்தியமையை அடுத்து அரசுக்கு காலக்கெடு விதிக்கும் அறிவிப்பை தொழிற்சங்கங்கள் விடுத்திருக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும். எதிர்வரும் மூன்றாம் திகதிக்கு முன்னர் இந்தப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் கைமாற்றும் நடவடிக்கையை அரசு இடைநிறுத்தாவிடில், முழு நாடும் இருளில் மூழ்கும் ஆபத்து நேரும் என்று மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்கச் சம்மேளனம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றமை சிறிய விவகாரம் அல்ல. அந்தத் திகதிக்குப் பின்னர் நாடு இருளில் மூழ்கினால் அதற்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று மின்சார ஊழியர் தொழிற்சங்கம் கருத்து வெளியிட்டிருக்கின்றமை மிகவும் முக்கியமான விடயமாகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடி மற்றும் ஆசிரியர்கள், விவசாயிகள், பொதுமக்களின் போராட்டங்களினால் தகித்துக் கொண்டிருக்கும் நாட்டில், மின்சார சபை ஊழியர்களின் எச்சரிக்கை முன்னறிவிப்பு மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசுக்கு நெருக்கடிகள் நாலாபுறத்திலும் சூழ்ந்து இறுக்கி வருவதை இப்போதைய நிலைமை சுட்டிக்காட்டுகின்றது. அரசு இந்த இக்கட்டுக்களை எப்படிச் சமாளிக்கப் போகின்றது?

வெளியில் எதிரணிகள், மற்றைய கட்சிகள் அரசுக்கு எதிராக மக்களுடன் சேர்ந்து ஒன்று திரண்டு வருகையில், இப்போது ஆளும் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகளும் சேர்ந்து ஆட்சிப் பீடத்தின் காலை வாரத் தயாராகி வருவது அரசுக்கு மிகவும் மோசமான சூழலை தந்துள்ளது.

# குடும்ப ஆட்சியால் இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்துள்ளது

## சிறிதரன் எம்.பி. காட்டம்



ராஜபக்ஷ அரசின் குடும்ப ஆட்சி காரணமாக இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது. இதுவே இன்று விவசாயிகளுக்கும் நடந்துள்ளது என்றுநாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

இன்று ஆசிரியர்களின் கல்வித்தரம் அதிபர்களின் தரம் என்பவற்றுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படாமல் இன்று ஒரு போராட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் காரணமாக இலங்கை குட்டிச்சுவராகி பொருளாதாரத்தில் தாழ்ந்து போயுள்ளது இதுதான் இன்று விவசாயிகளுக்கும் நடந்துள்ளது. ஓர் இரவிலேயே அனைத்து விவசாயிகளையும் இயற்கை விவசாயத்துக்கு மாறுங்கள் என்று சொன்னால் அவர்கள் எவ்வாறு மாற முடியும்.

குறிப்பாக உலகில் இயற்கை விவசாயம் இயற்கையான உணவு மனிதனுக்கு முக்கியமானது. இது உலக அரங்கில் தற்போது வளர்ந்து வருகின்றது. இது இலங்கையிலும் தற்போது வளர்ந்து வருகின்றது. அதற்காக நாங்கள் குரல் கொடுத்திருக்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# மன்னார் பள்ளிமுனை கடலில் அனுமதியின்றி கடல் அட்டை பிடித்த 3 மீனவர்கள் கைது

மன்னார் பள்ளிமுனை கடற்பரப்பில் அனுமதி இன்றி இரவு நேர கடல் அட்டை பிடிக்கும் தொழிலை மேற்கொண்ட 3 மீனவர் நேற்று (வியாழக்கிழமை ) காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதன்கிழமை இரவு குறித்த 3 மீனவர்களும் படகு ஒன்றில் மீன் பிடிக்க கடலுக்குச் சென்று அட்டை பிடித்த நிலையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கடற்படையினர் கடலில் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 3 மீனவர்கள் மற்றும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட ,453 கடல் அட்டைகள், படகு இயந்திரம், அட்டை பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் கண்ணாடி, சப்பாத்து என்பன மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம்வியாழக்கிழமை காலை கடற்படையினர் ஒப்படைத்தனர்.

குறித்த 3 மீனவர்களிடம் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரத்திற்கு அமைவாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் மூவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து பெறப்பட்ட சுமார் 453 கடல் அட்டைகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டது. கடல் அட்டை தொழில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மட்டுமே கடற்பரப்பில் அட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கடல் அட்டைகளின் உள்ளூர் சந்தை மதிப்பு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா என கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 'மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்' தொனிப்பொருளில் மன்னாரில் மர நடுகை

'மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்' எனும் தொனிப்பொருளில் மர நடுகை ஆரம்ப நிகழ்வு மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலையடி புதுக்குளம் ம.வி. பாடசாலையில் நடைபெற்றது. குறித்த மர நடுகை நேற்று (வியாழக்கிழமை) காலை இடம் பெற்றது.

வனவள திணைக்களத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இந்த மரம் நடுகை இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்ம லநாதன், மாந்தை மேற்கு பிரதேச செயலாள கே.அரவிந்தராஜ், மன்னார் மாவட்ட நீர்ப் பாசன பணிப்பாளர் என்.ஜோகராஜா, ம வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.முகுந்தன் மன்னார் மாவட்ட வனவள திணைக்கள அதி காரி ஆகியோர் கலந்து கொண்டு மர நடு கையை மேற்கொண்டனர்.

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்கின்ற உட்பொருளை நான் விமர்சிக்கமுடியாது என்கிறார் பிள்ளையான்

ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை நான் ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது. அதனுடைய நோக்கம் என்னவென்று அனைவருக்கும் தெரியும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணிக்கு ஜனாதிபதியால் ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இவ்வாறு பதிலளித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்–

அரசியல் ரீதியான கருத்துக்களை அதிகமாகக் கதைக்க விரும்பவில்லை. இது கோட்டாபய ராஜபக்ஷவின் முடிவின் பெயரிலேயே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற உட்பொருளை நான் ஊடகங்கள் வாயிலாக விமர்சிக்க முடியாது. அதனுடைய நோக்கம் என்னவென்று உங்களுக்கு தெரியும் தானே.

நானும் வர்த்தமாணி மூலம் ஜனாதிப யின் முடிவைப் பார்த்திருந்தேன். அவர் எந் நோக்கத்துக்காக இவரை நியமித்தா என்பதை பொறுத்திருந்துதான் பார்க் வேண்டும்.

ஆகவே அவரின் நிலைப்பாட் என்னால் விமர்சிக்க முடியாது. என்னுடை நிலைப்பாடு அரசாங்கத்துடன் சேர்ந்து ம களுக்கான நியாயத்துடன் சேவை செய்வது

ஒரே நாடு ஒரே சட்டம் என்பதைப் பற்றி கதைப்பதாக இருந்தால் விரிவாகக் கதைக் வேண்டும். இது பல விமர்சனங்களை கொண்டு வரலாம். அதனால் நான் கதைக் விரும்பவில்லை.

ஞானசார தேரர் பற்றி என்னைவி ஊடகவியலாளர் உங்களுக்குத் தெரியு தானே. எனவே இதில் நான் கூறுவதற் என்ன இருக்கின்றது. – என்று தெரிவி துள்ளார்.



# சூடானில் எதிர்ப்பாளர்கள் மீது பாதுகாப்புப் படைகள் தாக்குதல்!

சூடானின் ஆளும் இராணுவம், ஆறு தூதர்களை பதவி நீக்கம் செய்துள்ளது மற்றும் பாதுகாப்புப் படைகள் ஜனநாயக ஆதரவு எதிர்ப்பாளர்கள் மீதான ஒடுக்கு முறையை கடுமையாக்கியுள்ளன.

அரச ஊடகங்களில் புதன்கிழமை அறிவிக்கப்பட்ட இந்த முடிவானது, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, கட்டார், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கான சூடானின் தூதர்கள் மற்றும் சுவிஸ் நகரமான ஜெனிவாவுக்கான நாட்டின் தூதரகத்தின் தலைவர் ஆகியோரை உள்ளடக்கியது.

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நீண்டகால ஆட்சியாளரான உமர் அல்-பஷீர் மக்கள் எழுச்சியில் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஜனநாயகத்தை நோக்கிய சூடானின் பலவீனமான மாற்றத்தைத் தடம் புரட்ட திங்களன்று நடந்த ஆட்சிக் கவிழ்ப்பை, இராணுவம் பின்வாங்குவதற்கான கோரிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

இதனிடையே, ஆபிரிக்க ஒன்றியம் சூடான் நாட்டின் குடிமக்கள் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தை மீட்டெடுக்கும் வரை முகாமின் நடவடிக்கைகளில் இருந்து இடைநிறுத்துவதற்கான முடிவை நேற்று அறிவித்தது

அதே நேரத்தில் உலக வங்கி உதவியை முடக்கியது மற்றும் அமெரிக்கா 70 கோடி டொலர்கள் அவசர உதவியை நிறுத்தியது.

கார்ட்டூமில் உள்ள பல மேற்கத்திய தூதரகங்களும் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் அப்தல்லா ஹம்டோக் மற்றும் அவரது அமைச்சரவையை சூடானின் 'இடைநிலை அரசாங்கத்தின் அரசியலமைப்புத் தலைவர்கள்' என்று தொடர்ந்து அங்கீகரிப்பதாகக் கூறியுள்ளன. இதற்கிடையில், இராணுவத்தின் அதிகார அபகரிப்பைக் கண்டிக்கும் போராட்டங்கள் தலைநகர் கார்ட்டூமிலும் மற்றும் பிற இடங்களிலும் தொடர்ந்தன. ஒரு சிவில் ஒத்துழையாமை பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக வேலைநிறுத்தங்களுக்கான அழைப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக பல வணிகங்கள் மூடப்பட்டன.

நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் கார்டூமின் கிழக்கு மாவட்டமான புரியில் வீதி தடுப்புகளை அகற்றும் பாதுகாப்புப் படையினர் மீது கற்களை வீசினர். அதே நேரத்தில் தலைநகரின் வடக்கில், பாதுகாப்புப் பணியாளர்கள் டசின் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் தோட்டாக்களை வீசினர்.

ஹம்டோக்கிற்கு இன்னும் விசுவாசமாக இருக்கும் தகவல் அமைச்சகம் ஒரு அறிக்கையில், 'கவச வாகனங்கள் மற்றும் ஆண்களால் கவச வாகனங்கள் மற்றும் வீதிகள் முற்றுகையிடப்பட்டுள்ளன' என்று கூறியது. 'பெண்கள் தரையில் இழுத்துச் செல்லப்பட்டனர்' என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

# ஏலத்துக்கு வருகிறது உலகின் முதல் தபால் தலை




உலகில் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் 181 ஆண்டு பழமையான 'ஸ்டாம்ப்' எனப்படும் தபால் தலை, ஏலத்துக்கு வருவதற்கு வெளியிடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது, 61.82 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடான பிரிட்டனைச் சேர்ந்த 'சோத்பை' என்ற ஏல நிறுவனம், டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி இந்த உலகின் மிகப் பழமையான ஸ்டாம்பை ஏலத்துக்கு விட உள்ளது.பென்னி பிளாக் எனப்படும், பிரிட்டன் நாணயமான ஒரு பென்னிக்கு விற்கப்பட்ட மூன்று ஸ்டாம்ப் தொகுப்பில், இரண்டு ஏற்கனவே அருங்காட்சியகத்தில் உள்ளன.

மூன்றாவது ஸ்டாம்பை, ஸ்காட்லாந்தைச் சேர்ந்த அரசியல்வாதியான, ஸ்டாம்ப் சேகரிப்பாளர் ராபர்ட் வாலஸ் வைத்துள்ளார்.கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் அந்த ஸ்டாம்பை வாங்கிய அவர் ஆய்வுகளுக்குப் பின், அது, உலகின் முதல் ஸ்டாம்ப்களில் ஒன்று என்பதை உறுதி செய்துள்ளார்.

1840 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஒருவர் எழுதிய கடிதத்தில் இந்த ஸ்டாம்ப் இடம்பெற்றுள்ளது. பிரிட்டன் ராணி விக்டோரியாவின் உருவம் உள்ள இந்த ஸ்டாம்ப், தற்போது ஏலத்துக்கு விடப்பட உள்ளது. இது, 61.82 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்படலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

# விதிமுறைகளை மீறினால் தண்டனையாம் விமான சேவைகளிற்கு தலிபான் எச்சரிக்கை




பாகிஸ்தானின் சர்வதேச விமான சேவை மற்றும் ஆப்கானிஸ்தானின் காம் ஏர் விமான சேவை ஆகியவை காபூலில் இருந்து இஸ்லாமாபாத்திற்கு சேவையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்படும் என ஆப்கானிஸ்தானின் சிவில் ஏவியேன் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அத்துடன், தமது விதிகளை பாகிஸ்தானின் சர் வதேச விமான சேவை மற்றும் ஆப்கானிஸ்தா னின் காம் ஏர் விமான சேவை ஆகியன மீறி னால் விமான நிறுவனங்களுக்கு அபராதமும் தண்டனையும் விதிக்கப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காபூலில் இருந்து இஸ்லாமாபாத் செல்லும் ஒவ்வொரு பயணியிடமும் 250 டொலர்கள் வரையில் கட்டணம் அறவிட்டதை தொடர்ந்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய விதிகள் மீறப்படுகின்ற போது, அதுசம்பந்தமாக முறைப்பாடுகளை வழங்குவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும் ஆப்கானிஸ்தானின் சிவில் ஏவியேன் நிர்வாகம் கோரியுள்ளது.

அத்துடன், ஆவணங்களில் காணப்படுகின்ற மோசடிகள் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் ஆப்கானிஸ்தானின் சிவில் ஏவியேன் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

# ஆப்கானில் 439 அமெரிக்கர்கள் சிக்கியுள்ளனர் என்கிறது பென்டகன்

ஆப்கானிஸ்தானில் இன்னும் 439 அமெரிக்கர்கள் சிக்கியுள்ளனர் எனவும் அவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் அந்நாட்டு இராணுவத்தலைமையான பென்டகன் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறுவதாக அறிவித்தது முதலே தலிபான்கள் தங்களின் ஆதிக்கத்தைத் தொடங்கினர். கடந்த ஓகஸ்ட் மாதம், ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இதனையடுத்து கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படைகள் முற்றிலுமாக வெளியேறின. குறுகிய காலத்தில் அமெரிக்கர்கள், ஆப்கானிஸ்தான் நாட்டவர் உள்ளிட்ட 1 லட்சத்துக்கும் மேற்பட் டோரை அமெரிக்கா பத்திரமாக அப்புறப்ப டுத்தியிருந்தது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் இன்னும் 439 அமெரிக்கர்கள் இருக்கின்றனர் என அந்நாட்டு இராணுவத் தலைமையான பென்டகன் தெரிவித்துள்ளது. முன்னதாக, ஜோ பைடன் கூறும்போது, ஆப்கானில் 200க்கும் குறை வான அமெரிக்கர்கள் மட்டுமே இருப்பார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்க இராணுவ துணைச் செயலர் கோலின் கால் கூறும்போது, ஆப் கானிஸ்தானில் இன்னும் 439 அமெரிக்கர்கள் உள்ளனர். அவர்களில் 176 பேர் ஏற்கெனவே எப்படியாவது எங்களை மீட்டுக் கொள்ளுங்கள் என்று கோரியுள்ளனர். எஞ்சியுள்ள 243 பேரில் சிலர் இப்போதைக்கு அங்கிருந்து வெளியேறத் தயாராக இல்லை, சிலர் எப்போதுமே வெளியேற விரும்பவில்லை என்றும் கூறியுள்ளனர் என்றார்.

Jaffna College Institute of Technology
*Calls* for the following courses

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மாநாடுகளில் பங்கேற்க மோடி ஐரோப்பாவுக்குப் பயணமானார்



ஜி 20 உச்சி மாநாடு, பருவ நிலை மாறுபாடு தொடர்பான மாநாடு ஆகியவற்றில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று முதல் நவம்பர் 2 ஆம் திகதி வரை இத்தாலி மற்றும் பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இதையொட்டி டெல்லியில் இருந்து நேற்றிரவு தனி விமானம் மூலம் அவர் புறப்பட்டுச் சென்றார்.

இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெறும் 16 ஆவது ஜி 20 உச்சி மாநாடு நாளை மற்றும் நாளை மறுநாள் நடைபெறுகிறது. இத்தாலிய பிரதமர் மரியோ டிராகி அழைப்பு விடுத்ததன் பேரில் இந்தியப் பிரதமர் மோடி அதில் பங்கேற்கிறார். ரோமில், இத்தாலிய பிரதமர் மரியோவை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து பிரதமர் பேச்சு நடத்துவார் என, இத்தாலிக்கான இந்தியத் தூதர் டாக்டர் நீனா மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் இத்தாலிக்கு செல்லும் சந்தர்ப்பம் இதுவாகும். ஜி 20 மாநாடு முடிந்ததும், அங்கிருந்து பிரிட்டனின் கிளாஸ்கோவுக்கு செல்லும் இந்தியப் பிரதமர் மோடி, பருவநிலைமாறுபாடுதொடர்பான உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்.

# கன்னட சூப்பஸ்டார் இன்று காலமானார்



மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தென்னிந்தியாவின் பிரபல நடிகரும் கன்னட சூப்பர் ஸ்டாருமான புனித் ராஜ்குமார் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்துள்ளார்.

பெங்களூரில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலே, அவர் உயிரிழந்துள்ளார்.

புனித் ராஜ்குமார் காலை 11.30 மணியளவில் நெஞ்சுவலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலைக்கு அழைத்து வரும்போதே அவரது உடல் நிலை மோசமாக இருந்ததாக கூறப்படுகின்றது. இந்த நிலையில், அவர் உயிரிழந்துள்ளார்.



# முல்லைப் பெரியாறு அணையிலிருந்து உபரி நீர் கேரளாவிற்கு திறந்துவிடப்பட்டது

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 138 அடியாக உள்ள நிலையில் அணையிலிருந்து இரண்டு மதகுகள் வழியாக உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

முல்லைப்பெரியாறு அணையில் மொத்தமுள்ள 13 மதகுகளில் மூன்று மற்றும் நான்காவது மதகுகள் 35 சென்டிமீற்றர் உயர்த்தப்பட்டு அணையில் இருந்து வினாடிக்கு 534 கன அடி உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது. வெளியேற்றப்படும் இந்தத் தண்ணீர், வல்லக்கடவு என்ற பிரதேசத்தின் வழியாக இடுக்கி என்ற பகுதியிலுள்ள அணைக்குச் சென்றடையும் என்றும், அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அணையின் நீர்மட்டம் 140 அடியைத் தாண்டும்போது 13 மதகுகளிலிருந்தும் உபரிநீர் திறந்துவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு அணையில் 139.50 அடி வரையே நீரைத் தேக்கிவைக்க கேரள அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில் நீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கேரள நீர்வளத்துறை அமைச்சர் ரோஸி அகஸ்டின், வருவாய்த்துறை அமைச்சர் ராஜன், இடுக்கி மாவட்ட ஆட்சித் தலைவர் சீபா ஜார்ஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். 152 அடி கொள்ளளவு கொண்ட முல்லைப் பெரியாறு அணையில் 2014, 2015, 2018 ஆம் வருடங்களில் 142 அடி வரை தண்ணீர் தேக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நான்கு தசாப்தங்களுக்கு பா.ஜ.க. சக்தி வாய்ந்ததாக இருக்கும் ராகுல் இதை உணரவில்லை என பிரசாந்த் கிஷோர் கருத்து

இந்திய அரசியல் கட்சிகளின் தேர்தல் ஆலோசகராகச் செயல்பட்டு வருபவரான பிரசாந்த் கிஷோர், கோவாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது, எப்படியும் அடுத்த 40 ஆண்டுகளுக்கு பா.ஜ.க. இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய சக்தி வாய்ந்த கட்சி-யாக இருக்கும். வெற்றிபெற்றாலும் சரி, தோல்வியடைந்தாலும் சரி, பா.ஜ.க. முக்கிய பங்கு வகிக்கும். அது காங்கிரஸ் ஆட்சிக்கு ஆரம்ப நாள்களில் அமைந்த முதல் 40 ஆண்டுகளைப் போல இருக்கும்.

30 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகளை அனைத்திந்திய அளவில் ஒரு கட்சி பெறுகிறதென்றால் அதன் இருப்பு அவ்வளவு எளிதில் மறைந்துவிடாது. பிரதமர் மோடி இல்லை என்றாலும் பா.ஜ.க. அதிகார பலம் கொண்ட கட்சியாக இருக்கும். ராகுல் காந்தி இதை உணர மறுக்கிறார். இதெல்லாம் வெறும் சில காலந்தான் என அவர் நம்புகிறார். ஆனால், அது உண்மையில்லை என தெரிவித்துள்ளார்.

பிரசாந்த் கிஷோர் உரையாற்றிய காணொலியை பா.ஜ.கவின் முக்கியஸ்தரான அஜய் செஹ்ராவத் என்பவர் தனது டுவிட்டரில் பதிவிட, அதனை பா.ஜ.க. ஆதராவாளர்கள் பகிர்ந்துவருகின்றனர்.

காங்கிரஸ் கட்சியில் பிரசாந்த் கிஷோர் இணையப் போகிறார் என்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், பின்னர் அதுதொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் ஊடகங்களுக்குக் கிடைத்திருக்கவில்லை. இப்போது ராகுல் காந்தி பற்றி அவர் தெரிவித்திருக்கும் கருத்து, காங்கிரஸ் தலைமையோடு பிரசாந்த் கிஷோருக்கு முரண்பாடு ஏற்பட்டுவிட்டதை வெளிக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# ‘கல்வி முறையை மாற்றுங்கள்’ என காணொலி வெளியிட்டு கர்நாடகாவில் கல்லூரி மாணவர் ஒருவர் தற்கொலை

கர்நாடகாவின் கல்வி முறையை மாற்றியமைக்கக் கோரிக்கை முன்வைத்து காணொலியை வெளியிட்டுவிட்டு கல்லூரி மாணவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

கர்நாடகா மாநிலம் ஹாசன் மாவட்டத்திலுள்ள ராஜீவ் இன்ஸ்டிடியூட் ஒஃப் டெக்னோலஜி என்ற கல்லூரியில் விடுதியில் தங்கி பொறியியல் கல்வி பயின்றுவந்த 20 வயது மாணவர் ஹேமந்த் கவுடா, திங்கட்கிழமை தனது அறையில் தற்கொலை செய்து கொண்டார். அவர் இறப்பதற்கு முன்பு காணொலி ஒன்றைப் பதிவு செய்துள்ளார். அதில், தற்போதைய கல்வி முறையில் இருக்கும் பிரச்சினைகள் குறித்தும், அதை மாற்றக்கோரி கோரிக்கை விடுத்தும் பேசியுள்ளார். மேலும், தனது பெற்றோர், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றியும் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக, ஒருவரின் தொழில் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் இருக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கும் அவர், ஒருவர் எந்த வேலை செய்கிறார் என்பதை எப்படி முக்கியப்படுத்த முடியும்? என்று கேள்வியும் எழுப்பி இருக்கிறார். மேலும், தனது இறுதிச்சடங்கில் கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை மற்றும் கல்வி அமைச்சர் கலந்துகொள்ளவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருக்கிறார். தனது உடல் உறுப்புகளை தானம் செய்யுமாறும் அவர் தனது பெற்றோரிடம் கோரியிருக்கிறார். மாணவரின் இறப்பு குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'ஒரே நாடு ஒரே சட்டம்' இந்நாட்டில் சட்ட மூலமாகும் போது

# 20 க்கு கை உயர்த்தியோர் இதற்கும் கை உயர்த்துவர்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு



'ஒரே நாடு ஒரே சட்டம்' இந்நாட்டில் சட்ட மூலமாகும் போது 20 க்கு கை உயர்த்தியோர் அதற்கும் கை உயர்த்துவர் என்பதில் எந்த சந்தேகமுமில்லை என திருகோணமலை மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடைசி நிமிடம் வரை ஐக்கிய மக்கள் சக்தியோடு கூடிக்குலாவி ஒற்றுமையாக இருந்தவர்கள் திடீரென அந்தக் கட்சியின் நம்பிக்கைக்கும் முஸ்லிம் சமுகத்தின் நம்பிக்கைக்கும் துரோகம் செய்து 20 இற்கு கை உயர்த்தினார்கள். இதன் மூலம் சமுகத்திற்கு இதுவரை அவர்கள் பெற்றுக் கொடுத்ததென்ன?

20க்குவாக்களித்ததன்மூலம் இப்போது அரசின் பக்கம் தானே இவர்கள் உள்ளார்கள். அந்தப் பக்கத்தில் இருந்து தானே முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகள் உருவாக்கப்படுகின்றன.

முஸ்லிம் தனியார் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். காதி நீதிமன்றத்தை ஒழிக்க நடவடிக்கை எடுத்தார்கள். மத்ரஸாக்களை மூட முன்னின்றார்கள். உலமாசபைக்கு எதிராக கருத்துக்களை முன் வைத்து அதனைக் கலைக்க வேண்டுமென்றார்கள். இவை போன்ற பல பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்கள் என்ன தீர்வைப் பெற்றுத் தந்தார்கள்.

ஞானசார தேரர் தொடர்ச்சியாக முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். இவர்கள் 20 இற்கு கை உயர்த்தி அதிகாரம் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதியிடம் அது குறித்துப் பேசி அவரது முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை கட்டுப்படுத்தியிருக்கலாம்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோடு அல்லது அவர்கள் முற்று முழுதாக நம்பிக்கை வைத்திருக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவோடு பேசி முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம்.

இவை எதனையும் அவர்கள் செய்யவில்லை. மாறாக சாதாரண சங்கங்கள் தமது வரையறைக்குள் செய்வது போல ஞானசார தேரருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வதாக ஒரு போட்டோவை வெளியிட்டு படம் காட்டினார்கள். இதன் மூலம் நடந்தது என்ன? இவர்கள் யாருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாகபடம்காட்டினார்களோ அவர்தான் இன்று ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர். இப்போது இவர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள். இது தொடர்பாக யாரிடம் முறைப்பாடு செய்யப் போகின்றார்கள்?

ஞானசார தேரரின் பொது பலசேனா அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் காரியாலயத்தை திறந்து வைத்தவர் அப்போது பாதுகாப்பு அமைச்சு செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ற பகிரங்கமான விடயம் இவர்களுக்கு தெரியாத விடயமா? இப்போது இதே ஞானசார தேரர் தான் ஒரேநாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர். முன்பொரு முறை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சொன்னது போல கண்ணைத் திறந்து கொண்டு குழியில் விழுந்தவர்கள் தான் 20க்கு கை உயர்த்தியோர். இவர்களுக்கு தேவையானவைவழங்கப்பட்டாகிவிட்டது. இதனால் தான் அரசின் முக்கிய விடயங்களில் இப்போது இவர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றார்கள். இருப்பினும் இது அவர்களுக்குப் பிரச் சினையாகத் தெரியவில்லை. எனவே, ஒரே நாடு ஒரே சட்டம் சட்ட மூலமாகி நாடாளுமன்றத்திற்கு வாக்களிப்பிற்கு வருகின்ற போதும் இவர்களது ஆதரவை எப்படிப் பெற்றுக் கொள்வது என்ற மந்திரம் அரசுக்குத் தெரியும். அதனால் அதற்கு ஆதரவாகவும் இவர்கள் வாக்களிப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஞானசார தேரர் தலைவரா? ரவூப் ஹக்கீம் கண்டனம்



ஆட்சியை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கோஷத்தைநடைமுறைப்படுத்துவதற்கு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட செயலணிக்கு, நாட்டில் இனங்களுக்கிடையிலான வன்செயல்களைத் தொடர்ச்சியாகத் தூண்டியவரும், நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாக தண்டனை விதிக்கப்பட்டு, சிறைவாசம் அனுபவித்தவரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டவருமான பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மிகவும் வன்மையாக் கண்டிக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

எவருக்குமே அறவே புரியாத, எந்தவிதமான தெளிவுமற்ற 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விவகாரம் பற்றி பல்லின சமூகத்தவர் வாழும் இலங்கை நாட்டில் மக்கள் மத்தியிலும் பொது வெளியிலும் தாறுமாறான கருத்துக்கள் பரவலாக நிலவிவரும் நிலையிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான நோக்கம் ஆட்சிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதா என்ற பலத்த சந்தேகம் வலுப்பெற்று வரும் நிலையிலும், இன முறுகலை தொடர்ச்சியாகத் தோற்றுவித்து, வன்செயல்களைத் தூண்டி வருபவரும், குறிப்பாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அல்லாஹ்வையும் பகிரங்கமாகவே நிந்தித்து வருபவரும், பொதுவாக பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாகத் தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருபவருமான ஞானசார தேரரை பிரஸ்தாப குழுவுக்கு தலைவராக நியமித்திருப்பது நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற இனங்களுக்கிடையிலான துருவப்படுத்தலை மேலும் மோசமான நிலைமைக்கே இட்டுச்செல்லும்.

அரசாங்கத்தின் இச்செயல்பாடானது நாட்டில் அமைதியின்மை தொடர்வதற்கும் இனங்களுக்கிடையிலான மோதல்கள் அடிக்கடி நிகழ்வதற்கும் தூபமிடும் செயலாகவே அமைந்துள்ளன எனத் திட்டவட்டமாகக் கருதலாம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மிகவும் காரசாரமாகத் தெரிவித்துள்ளார்.

# பெருந்தோட்டத்துறை அமைச்சின் இணைப்புச் செயலாளர் நியமனம்

பெருந்தோட்டத்துறை அமைச்சின் கிழக்கு மாகாணத்திற்கான இணைப்புச்செயலாளராக ஓட்டமாவடியைச் சேர்ந்த கலாநிதி எம்.பி. முஸம்மில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பெருந்தோட்டத்துறை இராஜங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவினால் அண்மையில் அமைச்சில் வைத்து இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சின் கிழக்கு மாகாணத்திற்கான இணைப்புச் செயலாளராக நியமனம் பெற்றுள்ள கலாநிதி எம்.பி. முஸம்மில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அமைப்பாளராக செயற்பட்டவர் என்பதுடன் நாட்டை காக்கும் இளைஞர் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளராக செயற்பட்டு வருகிறார்.



# வாகரை பிரதேச சபையின் 45 ஆவது அமர்வு நேற்று

மட்டக்களப்பு – கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச சபையின் நாற்பத்தைந்தாவது சபை அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது சம காலத்திற்கு மிக அவசியமான தனிநபர் பிரேரணை ஒன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், தற்போதைய உறுப்பினருமான சிவஞானம் கோணலிங்கம் அவர்களினால் முன்வைக்கப்பட்டது.

கடந்த 21ம் திகதியன்று வாகரைப் பிரதேச சபைக்குட்பட்ட மாங்கேணி காரமுனையில் சட்டவிரோதமாகவும், மிக இரகசியமாகவும் மாகாண காணி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளினால் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக் களுக்கு குடியிருப்பு மற்றும் பயிற்செய்கை நடவடிக்கைகளுக்காக ஆறு ஏக்கர்கள் வீதம் அண்ணளவாக 200 பேருக்கு காணி அளவீடு செய்து கொடுப்பதற்காக மக்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவ்விடயங்களை அறிந்த அரசாங்கத்தினுடைய பங்காளிகளாக இருப்பவர்கள் இதனைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், அப்பிரதேச மக்களோடு களம் நுழைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏனைய பொதுமக்கள் என பலரும் காணி வழங்கப்பட இருந்த காரமுனைக்குச் சென்று மேற்கொண்ட எதிர்ப்பினால் தடுத்து நிறுத்த முடிந்திருந்தது . இது தொடர்பில் அவர் விளக்கம் கூறி பிரேரணையை முன்வைத்தார் சபை உறுப்பினர்களின் கருத்துகளின் அடிப்படையில் பிரதேச சபை உறுப்பினர் சி.கோணலிங்கம் அவர்களால் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறமை குறிப்பிடத்தக்கது .



# டேவிட் வோனரின் அபாரமான துடுப்பாட்டம்
# இலங்கை அணியை வென்றது ஆஸ்திரேலியா

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய சூப்பர்-12 போட்டியில், ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் இலங்கையணியை வென்றது.

குழு 1 இற்கான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 154 ஓட்டங்களை பெற்றது. குசல் பெரேராவும் சரித் அசலங்கவும் தலா 35 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்ட்ராக், பட் கம்மின்ஸ் மற்றும் அடம் ஸம்பா மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்து 155 என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 17 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை எட்டியது. டேவிட் வோனர் 65 ஓட்டங்களையும் ஆரோன் பின்ச் 37 ஓட்டங்களையும் சேர்த்தனர். ஸ்டீபன் ஸ்மித் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதிப்படுத்தினார். இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக அடம் ஸம்பா தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி மொத்தமாக 4 புள்ளிகளோடு குழு 1 இல் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. முதலிடத்தில் இங்கிலாந்து அணி உள்ளது. இலங்கையணி 2 புள்ளிகளோடு தென்னாபிரிக்காவுக்கு அடுத்ததாக நான்காமிடத்தில் இருக்கிறது.

# தக்கவைத்துக்கொள்ளும் வீரர்கள் ஜப்னா கிங்ஸ் அணி அறிவித்தது




லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) கிரிக்கெட் தொடரின் இந்த வருடத்துக்கான ஏற்பாடுகள் பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிய உரிமையாளரின் கீழாக பெயர் மாற்றம் கண்டுள்ள அணியான ஜப்னா கிங்ஸ், போட்டி விதிமுறைகளுக்கு அமைவாக, தான் தக்கவைத்துக்கொள்ளப்போகும் உள்நாட்டு வீரர்கள் பற்றிய விவரத்தை வெளியிட்டுள்ளது.

அணியின் தலைவரான திசர பெரேரா, வனிந்து ஹசரங்க, அவிஷ்க பெனார்டோ மற்றும் மகேஷ் தீக்ஷன ஆகிய நான்கு வீரர்களைத் தக்கவைப்பதாக ஜப்னா கிங்ஸ் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. சர்வதேச வீரர்களான தென்னாபிரிக்காவின் பப் டு பிளெஸிஸ் மற்றும் பாகிஸ்தானின் வஹாப் ரியாஸ் ஆகியோரை ஜப்னா கிங்ஸ் அணி வாங்கியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் லங்கா பிறீமியர் லீக்கின் இரண்டாவது தொடரை ஆரம்பிப்பதற்கான வேலைகளை முன்னெடுத்து வருவதாக இலங்கைக் கிரிக்கெட் சபையும் தெரிவித்துள்ளது.

# வியன்னா ஓபன் டென்னிஸ் காலிறுதியில் டியாபோ



வியன்னா ஓபன் டென்னிஸ் போட்டித்தொடரில் அமெரிக்காவின் பிரான்சஸ் டியாபோ காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தொடரின் முதல் நிலை வீரரான கிரீஸின் ஸ்டெபானஸ் சிட்சிபாசுடன் பிரான்சஸ் டியாபோ விளையாடினார். முதல் செட்டை 6-3 என சிட்சிபாஸ் கைப்பற்றினார். எனினும் அடுத்த இரண்டு செட்களை டியாபோ 6-3, 6-4 எனக் கைப்பற்றி சிட்சிபாசுக்கு அதிர்ச்சியளித்தார். காலிறுதியில் ஆர்ஜென்டினாவின் ஸ்வார்ட்மனை எதிர்த்து டியாபோ விளையாடவுள்ளார்.




# ஐ.பி.எல்லில் தக்கவைக்கும் வீரர்கள், செலவிடும் ஏலத்தொகை; நடைமுறைகள் பற்றிய தகவலை பி.சி.சி.ஐ. வெளியிட்டது

அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் மெகா ஐ.பி.எல். ஏலத்தில் ஏற்கெனவே இருக்கும் அணிகள் 4 வீரர்களைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்ற முடிவை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ.) எடுத்துள்ளது.

14 ஆவது ஐ.பி.எல். ரி20 போட்டிகள் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்து முடிந்தன. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தை நான்காவது முறையாக வென்றது. தற்போது 15 ஆவது சீசன் ஐ.பி.எல். தொடருக்கு பி.சி.சி.ஐ. இப்போதே ஆயத்தமாகிவருகிறது. அடுத்தாண்டு ஐ.பி.எல்லில் மேலும் இரண்டு புதிய அணிகளாக அகமதாபாத் மற்றும் லக்னோ அணிகள் நுழைகின்றன. மொத்தம் 10 அணிகள் அடுத்தாண்டுத் தொடரில் களம் காண்கின்றன. அணிகளுக்கு வீரர்களை உள்வாங்குவதற்கான மெகா ஏலம் வரும் டிசெம்பர் மாதத்தில் நடத்தப்படவிருக்கிறது.

அதற்கு முன்பாக ஒவ்வொரு அணிகளும் எத்தனை வீரர்களைத் தக்க வைத்துக்கொள்ளலாம், ஏலத்தில் எவ்வளவு தொகை செலவிடலாம், வீரர்களை விடுவிப்பதற்கான முறை உள்ளிட்டவற்றை பி.சி.சி.ஐயும், ஐ.பி.எல். ஆட்சி மன்ற குழுவும் அணி நிர்வாகிகளிடம் கலந்தாலோசித்து தயாரித்து வருகின்றன. அதன்படி ஏற்கனவே தொடரில் விளையாடிவரும் 8 அணிகளும் தலா 4 வீரர்களைத் தக்கவைத்துக்கொள்ளலாம் என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது. இந்த 4 வீரர்களில் 3 பேர் இந்தியர், ஒருவர் வெளிநாட்டவர் அல்லது 2 இந்தியர், 2 வெளிநாட்டவர் என்ற அடிப்படையில் இருக்கலாமென்று தெரிகிறது.

லக்னோ, அகமதாபாத் ஆகிய புதிய அணிகள் ஏலப் பட்டியலில் இடம்பெறும் வீரர்களிலிருந்து 3 வீரர்களை ஏலத்திற்கு முன்பாகவே எடுத்துக் கொள்ளலாம் என்ற திட்ட வரையறையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அணியும் ஏலத்தில் வீரர்களை வாங்குவதற்கு முன்னைய ஏலங்களில் இந்திய நாணய மதிப்பில் 85 கோடி ரூபாவை செலவிட்டன. அது இம்முறை 90 கோடியாக உயர்த்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# லண்டன் வரும் கோட்டாவை கைது செய்ய வலியுறுத்தல்!

## வைகோ விடுப்பு



லட்சக்கணக்கான ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்து இனப்படுகொலை செய்த கொடியவர்கள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷமற்றும் இலங்கைப்படைத்தலைவர்கள் கமால் குணரட்ன, ஜகத் ஜெயசூரியா, சிசிர மெண்டிஸ் மற்றும் பல அதிகாரிகளைக் கைது செய்து, உலக நீதிமன்றத்தின் குற்றக்கூண்டில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை, மறுமலர்ச்சி தி.மு.கழகம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

சுவிட்ஸர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் உள்ள, ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தின் 36 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்றபோது, அந்த கருத்தை வலியுறுத்தியுள்ளேன் என மறுமலர்ச்சி தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்திய நாடாளுமன்றத்திலும் பேசி இருக்கின்றேன். 2009 ஆம் ஆண்டு, இறுதிக்கட்டப் போரில் மட்டும், ஒரு லட்சத்து 37 ஆயிரம் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என, ஐ.நா. மன்றம் அமைத்த மார்சுகி தருஸ்மன், ஸ்டீவன் ராட்னர், ஜஸ்மின் சூகா ஆகிய மூவர் குழு அளித்த ஆய்வு அறிக்கை, ஆவணச் சான்றுகளுடன் குற்றம்சாட்டி இருக்கின்றது.

ஆனால், 12 ஆண்டுகள் கடந்த பின்னரும், இன்றுவரையிலும், இனப்படுகொலையாளர்கள் மீது எந்த நடவடிக்கையையும், உலக நாடுகள் மேற்கொள்ளவில்லை. இலங்கையிலும் அத்தகைய நீதி விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

இது தமிழ் இனத்துக்கு எதிரான அநீதி ஆகும். படுகொலை செய்யப்பட்டவர்கள் தவிர, பல்லாயிரக்கணக்கில் காணாமல்போன ஈழத்தமிழ் இளைஞர்களின் நிலை என்ன? அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா? என்பதும் தெரியவில்லை.

சுமார் 8 லட்சம் தமிழர்கள், இலங்கையில் இருந்து வெளியேறி, உலகின் பல நாடுகளில் அடைக்கலம் பெற்று இருக்கின்றார்கள். அவர்களில் பல்லாயிரக்கணக்கானவர்கள், இலங்கைக்கு வந்து போவதற்கும் இலங்கை அரசு தடை விதித்து இருக்கின்றது.

தவிர, ஆள்கடத்தல், சட்டத்துக்கு எதிராகத் தடுத்து வைத்தல், சித்திரவதைகள், வலுக்கட்டாயமாக நாடு கடத்தல் போன்ற குற்றங்களையும், இலங்கையின் சிங்கள இனவாத அரசு, தொடர்ந்து செய்து வருகின்றது.

இவையெல்லாம், மனித உரிமைகளுக்கு எதிரான குற்றம். மியன்மார் நாட்டில், ரொகிங்யா முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்த வழக்கை, உலக நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு இருக்கின்றது.

அதுபோல, இலங்கையில் பாதிக்கப்பட்ட 200 தமிழர்கள் சார்பாக, ரோமச் சட்டத்தின் 15 ஆவது சரத்தின் கீழ் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு நடத்துபவரின் கவனத்துக்கு, பிரச்சினையைக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த நிலையில், பிரித்தானியாவில் கிளாஸ்கோ நகரில், ஐ.நா.மன்றத்தின் சார்பில், இந்த ஆண்டு காலநிலை மாற்ற மாநாடு நடைபெற இருக்கின்றது. அந்த மாநாட்டில், கோட்டாபய ராஜபக்ஷ கலந்துக்கொள்ள இருக்கிறார் எனத் தெரிகின்றது.

அந்தக் கொடியவனின் வருகையை எதிர்த்துக் களம் காண, புலம் பெயர் நாடுகளில் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள். இனக்கொலை செய்த பல நாடுகளின் ஆட்சியாளர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணையின் முடிவில் தண்டனை பெற்று இருக்கின்றார்கள்.

இரண்டாம் உலகப்போரின்போது, 3 ஆயிரத்து 500 யூதர்கள் படுகொலையில் தொடர்பு உடைய, 100 வயதான நாஜி அதிகாரி மீது, ஜேர்மனி நாட்டின் நீதிமன்றத்தில் கடந்த மாதம் விசாரணை ஆரம்பித்து இருக்கின்றது.

அதுபோல, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்களை இழைத்த கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்து, குற்றக்கூண்டில் நிறுத்த வேண்டும் என, ஈழத்தமிழ் அமைப்புகள் பிரித்தானிய அரசின் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த கோரிக்கையை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஆதரிக்கின்றது. இந்தக் கருத்தை வலியுறுத்தி, ஐரோப்பிய தமிழ் தொலைக்காட்சிகளுக்கு நேர்காணல் அளித்துள்ளேன்.

ஐரோப்பியக்கண்டத்தின்பல்வேறுநாடுகளில் வாழ்கின்ற ஈழத்தமிழர்கள் ஒருங்கிணைந்து, கோட்டாபயவுக்கு எதிரான அறப்போரில் களம் காணவேண்டும்எனவும்கேட்டுக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# டிசெம்பரில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

டிசெம்பர் மாதமளவில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து நிலவுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து மக்கள் சுகாதார நடைமுறைகளை மீறி செயற்பட்டு வருகின்றனர் என சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

மக்கள்சுகாதாரநடைமுறைகளை மீறி சுற்றுலாக்கள் சென்றுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் இரு வாரங்களில் மேலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொவிட் தடுப்பூசி வழங்கும் இலக்கை எவ்வித தடையுமின்றி அடைய முடியும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



நாட்டின் மொத்த சனத்தொகையில் 70 வீதமானோருக்குக் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசி வழங்கும் இலக்கை எவ்வித பிரச்சினைகளும் இன்றி அடைய முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் தடுப்பூசி, கொரோனா வைரஸுக்கு எதிராக முழுமையான பாதுகாப்பை வழங்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனால் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி இளைஞர் ஒருவர் தற்கொலை முயற்சி!

வவுனியா தேக்கவத்தை பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி இளைஞர் ஒருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். மேற்படி இளைஞர் மல்லாவி பகுதியைச்சேர்ந்த பெண் ஒருவரைக் காதலித்து பதிவுத்திருமணம் செய்துள்ளார். பின்னர் அவரை அழைத்துக் கொண்டு வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் சிலகாலம் வாழ்ந்துள்ளார். இந்நிலையில் கடந்த 21 ஆம் திகதி பெண்ணின் உறவினர்கள் அந்த வீட்டிற்கு வருகைதந்து பெண்ணை வாகனம் ஒன்றில் ஏற்றி அவர்களது வீட்டுக்கு அழைத்துச்சென்றனர்.

இந்நிலையில் தன்னை தாக்கிவிட்டு தனது மனைவியை அவர்கள் கடத்திச்சென்றனர் என அந்த இளைஞர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் பொலிஸார் இந்த விடயத்தில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்து வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் இளைஞர் ஏறி தற்கொலை செய்யப்போகிறேன்எனமிரட்டியதுடன், கூரிய ஆயுதத்தால் தனது கையையும் அறுத்திருந்தார். சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டநிலையில்சம்பவ இடத்துக்கு பொலிஸார்வருகை தந்திருந்தனர். எனினும் பொலிஸார் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என கோபுரத்தில் ஏறிய இளைஞரின் உறவினர்கள் பொலிஸாருடன் முரண்பட்டமையுடன் நீண்டநேரமாகியும், இளைஞரை மீட்பதற்கான நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டினர்.

# நாட்டு மக்களை படுகுழிக்குள் தள்ளியது ராஜபக்ஷ அரசு!

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு



ராஜபக்ஷ அரசு நாட்டு மக்களைப் படுகுழிக்குள் தள்ளியுள்ளமையுடன் வரிசையில் நிற்கும் நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இந்த அரசின் ஆட்சியில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் சீர்குலைந்துள்ளன. விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்றுமதி முற்றுமுழுதாக அழிந்துள்ளது. சோமாலியா போன்று எமது நாட்டையும் மாற்றியுள்ள இந்த அரசு, தற்போது விவசாயிகள் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாதளவு நாட்டை நாசமாக்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.